## 29.27 ஒரு ஊராட்சிக்கு ஒரு மக்கள் நலப் பணியாளர் பதவி வீதம் 12,618 மக்கள் நலப் பணியாளர்கள் பதவி தோற்றுவித்தல்

ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் துறை

அரசாணை (நிலை) எண். **51** நாள் : 12.06.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.496, ஊ.வ.துறை, நாள் 2.9.1989.
2. அரசாணை (நிலை) எண்.50, ஊ.வ.துறை, நாள் 24.2.1997.
3. அரசாணை (நிலை) எண்.253, ஊ.வ.துறை, நாள் 18.9.2000.
4. அரசாணை (நிலை) எண்.149, ஊ.வ.துறை, நாள் 1.6.2001.
5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.41724/2006/இ1, நாள் 25.5.2006.

**ஆணை :**

**1.** ஊரகப் பகுதிகளில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கல், கிராமப் பொதுச் சொத்துக்களைப் பேணிக் காத்திடல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற கிராம அளவிலான பல்வேறு பணிகளுக்காக ஒரு ஊராட்சிக்கு ஒரு ஆண், ஒரு பெண் என இரண்டு மக்கள் நலப் பணியாளர்கள் எனும் பதவி முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்டு, கிராமப்புற இளைஞர்களுக்கு 1989–ம் ஆண்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

**2.** ஊராட்சிகளின் பணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஆண் மக்கள் நலப்பணியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும், பெண் மக்கள்நலப் பணியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும் வரையறுத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. அவர்கள் கீழ்க்குறித்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டனர்

(1) வயது வரம்பு –18 முதல் 30 வரை

(2) கல்வித் தகுதி – 10–வது வகுப்பு வரை (மலைவாழ் மக்களுக்கு – 8–ஆம் வகுப்பு)

(3) இருப்பிடம் – அந்தந்த ஊராட்சி எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

**3.** பின்னர், மக்கள் நலப் பணியாளர்கள் பதவி தேவையில்லை என அரசு முடிவு செய்து அரசாணை (நிலை) எண். 256, ஊ.வ., நாள் 13.7.1991–ல் இத்திட்டம் கைவிடப்பட்டு ஆணையிடப்பட்டது. மீண்டும், 1997ஆம் ஆண்டில், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வழங்கும் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, மக்கள் நலப் பணியாளர்கள் மதிப்பூதியம் பெறும் பகுதிநேர ஊழியர்களாக, ஒரு ஊராட்சிக்கு ஒருவர் வீதம் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. அவர்களுக்கு மாதம் ரூ.500/– மதிப்பூதியம் வழங்கப்பட்டது. பின்னர், இது மாதம் ரூ.750/– ஆக உயர்த்தப்பட்டது. மேலும், பயணப்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.50 அளிக்கப்பட்டது. 13,394 மக்கள் நலப்பணியாளர்கள் பணியாற்றி வந்தனர்.

**4.** மக்கள் நலப் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பணிகள் வரையறுக்கப்பட்டன:

(1) ஊராட்சி தொடர்பாக அனைத்து அடிப்படை விபரங்களைப் பராமரித்தல்.
(2) பூங்காக்கள், சமூகக் காடு மற்றும் குட்டைகள் போன்ற கிராம பொதுச் சொத்துஆதாரங்களை பராமரித்தல்.
(3) அருகில் உள்ள பொது நூலகத்திலிருந்து கிராம நூலகப் பணியினை விரிவாக்கல்.
(4) கிராமங்களில் உள்ள குடிநீர் கைப்பம்பு பராமரிப்பில் கூடுதல் பாதுகாவலராகப் பணிபுரிதல்.
(5) சிறுசேமிப்புப் பணிக்கு முகவராக இருத்தல், இப்பணிக்கு தனியாக முகவர் ஊக்க ஊதியம் பெற்றிட தகுதியுள்ளவராவார்.
(6) மின்சார வாரியத்திடம் தொடர்பு கொண்டு தெரு விளக்குகளைப் பராமரித்தல்.
(7) ஊரக வளர்ச்சி இயக்குநரால் வரையறுக்கப்படும் ஏனைய பணிகள்.
(8) மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை மக்களிடையே பரப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
(9) முதியோர் கல்வி – முறைசாரா கல்வி ஊக்கப்படுத்துதல்.
(10) குடும்பநலம் மற்றும் தடுப்பு ஊசி திட்டங்களை ஊக்கப்படுத்துதல்.
(11) சத்துணவுத் திட்டப் பணிகளுக்கு உதவிபுரிதல்.
(12) மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பணிகள் (மக்கள் நலப் பெண் பணியாளர்கள் மட்டும்).
(13) கிராமங்களில் அமைதியைப் பேணிக்காக்க உதவிபுரிதல்.
(14) அரசுத் திட்டங்களை மக்களிடம் பரப்புதல்.

(15) வரி கேட்பு மற்றும் இது தொடர்பான ஆவணங்கள் தயாரிப்பதற்கு உதவுதல்

(16) வரி வசூலித்தல், பஞ்சாயத்துக்களுக்கான நிதி, வருவாய், ரசீது புத்தகங்கள் மற்றும் இது தொடர்பான ஆவணங்கள் பராமரித்தல் ஆகியவற்றிற்கு உதவுதல்.

(17) ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக அபாயகரமான வணிகங்களுக்கான கட்டணத்தை வசூலிப்பதற்கு உதவுதல்.

(18) கிராம ஊராட்சிப் பணிகளின் செயலாக்கத்தில் குறிப்பாக குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் பராமரித்தல், சாலைப் பணிகள் மற்றும் மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களை செயல்படுத்துவதில் உதவுதல், மற்றும்

(19) கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சி பதிவேடுகள் (படிவங்கள் 1–31) மற்றும் பஞ்சாயத்து சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் பஞ்சாயத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள் பற்றிய பதிவேடுகளை பராமரிப்பதில் உதவுதல்

5. ஊராட்சிகளில் மிகுதியான பணியாளர்கள் இருப்பதால் மக்கள் நலப்பணியாளர்கள் பணியினை தற்காலிகமாகத்தான் தொடர முடியும் என ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்தார். அவர்களின் பணி ஒப்பந்த அடிப்படையில் 14.9.2001 வரை நீட்டிக்கப்பட்டு 18.9.2000 நாளிட்ட அரசாணை எண்.253–ல் ஆணை வெளியிடப்பட்டது. இதனிடையே மக்கள் நலப்பணியாளர்களின் பணியினை ஆய்வு செய்தபின் மக்கள் நலப்பணியாளர்களின் பணியினை கவனித்துக் கொள்ள ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி அளவில் போதுமான பணியாளர்கள் இருப்பதாக அரசு கருதி, மக்கள் நலப் பணியாளர்கள் பதவியை நீக்கி (abolish) அரசாணை(நிலை) எண்.149, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 1.6.2001–ல் ஆணையிடப்பட்டது.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஊரகப் பகுதிகளில் ஊராட்சித் தலைவர்களுக்கும் ஊராட்சி உதவியாளர்களுக்கும் நிர்வாகத்தில் உதவிபுரிந்து வந்துள்ளதாலும், அவர்கள் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தில் உதவியாக இருப்பார்கள் என்பதாலும், மக்கள் நலப் பணியாளர் பதவியிடங்களுக்கு புத்துயிர் அளிக்கலாமென்று தெரிவித்து பின்வரும் ஆணைகளை வேண்டியுள்ளார்:

1) ஊராட்சிகளில் மக்கள் நலப் பணியாளர் பதவியை மீண்டும் ஏற்படுத்தலாம்.

2) 31.5.2001 அன்று, பணியிலிருந்த அனைவரையும் நியமனம் செய்யலாம்.

3) மக்கள் நலப் பணியாளர்களுக்கான மதிப்பூதியமான மாதத்திற்கு ரூ.750/– என்பதை மாதத்திற்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்தலாம். மேலும், மாதப் பயணப்படியாக ஏற்கனவே வழங்கப்பட்டதைப் போன்று மாதம் ரூ.50/– வழங்கலாம். இதற்கான நிதியினை, மாநில அரசு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக ஏற்கனவே வழங்கியதைப் போல வழங்கலாம்.

7. இதனை அரசு கவனமாக ஆய்வு செய்து பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கப்படுகிறது:

1) ஊராட்சிகளில் மக்கள் நலப் பணியாளர் பதவி மீண்டும் முதற்கண் 1.6.2006 முதல் ஓராண்டுக்கு ஏற்படுத்தப்படுகிறது. ஒரு ஊராட்சிக்கு ஒரு மக்கள் நலப் பணியாளர் பதவி வீதம் 12,618 மக்கள் நலப் பணியாளர்கள் பதவி ஏற்படுத்தப்படுகிறது.

2) 31.5.2001 அன்று, பணியிலிருந்த மக்கள் நலப் பணியாளரை மட்டும் நியமனம் செய்ய வேண்டும்.

3) மக்கள் நலப் பணியாளர்களுக்கான மதிப்பூதியமான மாதத்திற்கு ரூ.750/– என்பதை மாதத்திற்கு ரூ. 950/– (ரூபாய் தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) ஆகவும், மாதப் பயணப்படியாக ஏற்கனவே வழங்கப்பட்டதைப் போன்று மாதம் ரூ.50/– வழங்க வேண்டும். இதற்கான நிதியினை, மாநில அரசு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக ஏற்கனவே வழங்கியதைப் போல வழங்கும்.

4) முன்பு பணியமர்த்தப்பட்டு இத்திட்டம் 1997–2001 வரை நடைமுறையிலிருந்தபோது 31.5.2001 அன்று பணியாற்றி பணிநீக்கம் செய்யப்பட்ட சான்றிதழை அளிக்க வேண்டும்.

5) இது குறித்த செய்தி அறிவிக்கையை உள்ளூர் தினத்தாள்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வெளியிட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட தகுதிகளுக்குட்பட்டு 15 நாட்களுக்குள் விருப்பமுள்ள பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

6) இப்பணிக்கு நியமிக்கப்படுவோர் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில், மதிப்பூதியம் மட்டும் பெறும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆவார்கள். இவர்கள் செய்யும் சேவைக்காக மதிப்பூதியமாக மாதம் ரூ.950/–ம் பயணப்படியாக மாதம் ரூ.50/–ம் ஆக மொத்தம் ரூ.1000/– அந்தந்த ஊராட்சி மூலம் வழங்கப்படும். இதற்காக ஏற்படும் ஆண்டு செலவினம் ரூ.15.1416 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10.0944 கோடியாகும். இதற்காக ஊராட்சிகள் செய்யும் செலவுக்காக ஒரு பணியாளருக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.1000/– வீதம் அரசு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நிதி உதவி வழங்கும். இவை மாவட்ட ஆட்சித்தலைவரால் பெறப்பட்டு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும். 1.6.2001 முதல் 31.5.2006 வரை இவர்கள் பணிபுரியாத காலத்திற்கு எந்தவிதமான தொகுப்பூதியமும் வழங்கப்பட வேண்டியதில்லை.

7) மேலே பத்தி 4–ல் குறிப்பிட்ட பணிகளை மக்கள் நலப் பணியார்கள் செய்ய வேண்டும். இது தவிர மாவட்ட ஆட்சித் தலைவர், திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சித் தலைவர்கள் அவ்வப்போது அறிவுறுத்தப்படும் இதர பணிகளையும் செய்ய வேண்டும்.

8) இது ‘‘புது பணி’’ குறித்த செலவினமாகும். இதற்கான ஒப்புதல் சட்டமன்றத்தில் காலப் போக்கில் பெறப்படும். சட்டமன்ற ஒப்புதல் பெறுவதை எதிர்நோக்கி இதற்கான செலவினத்தை எதிர்பாராநிதி செலவினத்திலிருந்து (Contingency Fund) முன்பணம் பெறுவதின் மூலம் மேற்கொள்ளப்படும். தேவையான முன்பணம் பெற ஏதுவாக ஊரக வளர்ச்சி இயக்குநர் உரிய படிவத்தில் இதற்கான கருத்துருவின் விண்ணப்பத்தை – நிதி (வரவு செலவு (பொது 1) துறைக்கு உரிய படிவத்தில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச் செலவினத்தை முதலாவது துணை மான்யக் கோரிக்கை 2006–2007ல் சேர்த்திட உரிய வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை உரிய தருணத்தில் நிதி (வரவு செலவு (பொது 1)/ ஊரக வளர்ச்சி) துறைக்கு அனுப்பி வைத்திடும்படியும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9) இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் பணிநியமனம் வேண்டுவோர் உறுதிமொழி ஒன்றை அளிக்க வேண்டும்.

10) மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியச் செலவினத்தை கீழே குறிப்பிடப்படும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

‘‘2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்.800.ஏனைய செலவு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் –II. மாநிலத் திட்டம் JQ ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டம் – மக்கள் நலப் பணியாளர்கள் 33. தொழில் முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் 04. ஒப்பந்த ஊதியம் (து.தொ.கு.எண்.2515–00–800–JQ–3344).

8. இவ்வாணையின் நகலை மாவட்டத்திலுள்ள இத்தொடர்புடைய இதர துறை அலுவலர்களுக்கும் ஊரக வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணை 9–6–2006 நாளிட்ட நிதித்துறையின் அ.சா.எண்.1758/FS/P/2006 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.138–டன் வெளியிடப்படுகிறது.

10. இவ்வாணையை ஊரக வளர்ச்சித் துறையின் ‘‘www.rural.tn.gov.in’’ வலைதள முகவரியில் காணலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்

**இணைப்பு**

1. பெயர்
2. வயது
3. ஊர்
4. முன்பு பணிபுரிந்த காலம்
5. 31.5.2001 அன்று பணியில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டவரா ?
6. ஆமெனில் எந்த ஊராட்சி(நகல் இணைக்கவும்)

மேற்குறித்தவிவரங்கள் உண்மை என உறுதியளிக்கிறேன்.

மேலும் நான் பணிபுரியாத 1.6.2001 முதல் 31.5.2006 வரையிலான காலத்திற்கான நிலுவைத் தொகை ஏதும் கோரமாட்டேன் எனும் நிபந்தனைக்குட்பட்டு இப்பணியில் சேருகிறேன்.

கையொப்பம்

இடம் :

நாள் :

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்